பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கே அனுப்பப்பட்டார்கள். இவைகளெல்லாம் இந்த அவையிலேயுள்ளவர்களுக்கு நனகு தெரியும். ஆனாலும் தொடர்ந்து, அடிக்கடி இந்த நிலைமை மராட்டிய மாநிலத்திலே வாழ்கின்ற தமிழர்களுக்கு ஏற்பட்டு வருகிறது. அந்த நிலைமைகள் இனியும் ஏற்படாதவண்ணம் அங்கிருக்கின்ற தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மராட்டியத்தினுடைய முதலமைச்சரவர்களுக்கு தமிழ் நாட்டின் முதலமைச்சர் என்கின்ற முறையில் நான் எழுதுவேன். அவர்களுககு நல்ல பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன். எனவே அந்த அளவில் கூறி, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப்பிறகு, இப்பொருள்குறித்து விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய முக்கியத்துவம் இல்லை என்று கருதி, அனுமதி தர மறுக்கிறேன்.

(4) கவன ஈர்ப்பு

திருமயம் தொகுதி கோட்டூர் பகுதியில் ஏழை அரிசன விவசாயிகளுக்கு சாகுபடி செய்ய பாதுகாப்பு அளித்தல் குறித்து.

அடுத்து, 41-வது விதியின்கீழ் புலவர் பொன்னம்பலம் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

புலவர் பொ. பொன்னம்பலம் : தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

" திருமயம் தொகுதி, கோட்டூர்ப்பகுதியில் ஏழை அரிசனங்களுக்கு பட்டா வழங்கப்பட்டுச் சாகுபடி செய்துவந்த புன்செய் தரிசு நிலங்களையும், சீர்திருத்தம் செய்யமுயன்ற புன்செய் தரிசு நிலங்களையும் செம்மைப் படுத்த விடாமலும், மீண்டும் உழவிடாமலும் ஒரு சிலர் தடுத்துத் தொல்லை கொடுத்து வருகின்றமை குறித்தும், அவ்வேழைமக்கள் உழுது சாகுபடி செய்யத்தக்க வகையில் பாதுகாப்பளிக்க வேண்டியது குறித்தும் ".

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கோட்டூர்க் கிராமத்தில் சர்வே எண்கள். 63/2, 261/5, 6 ஆகியவற்றிலுள்ள 20.43 ஏக்கர் தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலத்தை 'தர்க்காஸ்து' (ஒப்படை மனு) விதிகளின் கீழ் 1965-ல் திருமயம் தாசில்தார் 7 அரிசனங்களுக்கு ஒப்படை செய்தார். அதேபோன்று, சர்வே எண். 63/1-ல் உள்ள தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலம் 5.72 ஏக்கர். 1969-ல் 4 அரிசனங்களுக்கு ஒப்படை செய்யப்பட்டு அவர்களுக்குத்

தற்காலிகப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. நிலங்கள் ஒப்படை செய்யப் பெற்ற 11 அரிசனங்களும் 1969 ஆகஸ்டு திங்களில் நிலத்தில் பயிரிடத் தொடங்கினர். ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் அரசாங்கத் தரிசு நிலங்களாகும்; இதற்கு முன்னர் பயிரிடப் படாத நிலங்களாகும்.

கோட்டூர் ஊராட்சி மன்றத் தலைவரின் தலைமையில் கோட்டூர்க் கிராமத்தின் ஆயக்கட்டுதாரர்கள், இந்த நிலங்கள் கோட்டிக் கண்மாய் ஏரி எதிர்வாயில் அமைந்துள்ள நிலங்களென்றும், அவை கோட்டிக் கண்மாய்க் குளத்தில் நீரை வடிப்பதற்கு வாரியாகப் பயன்பட்டு வருகின்றனவென்பதாலும் அவர்கள் மேற்படி ஒப்படையை எதிர்த்தார்கள். ஊராட்சியிடம் நிலை பெற்றுள்ள சர்வே எண் 63/1-ல் உள்ள தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலம், ஊராட்சியினரிடம் கலந்து பேசாமலும் ஊராட்சிக்குள்ள உரிமையைத் திரும்பப் பெறுமலும் ஒப்படை செய்யப்பட்டுள்ளதாகக் கோட்டூர் ஊராட்சித் தலைவர் மேலும் மறுப்புத் தெரிவித்தார்.

அந்தக் கிராமத்து மக்களுக்கும் அரிசனங்களுக்கும் இடையே ஏற்பட்ட மனக் கசப்பின் காரணமாக அக்கிராமத்தின் அமைதி நிலைமை பாதிக்கப்படுமென்பதால், இந்த ஒப்படை குறித்து விரிவான முறையில் விசாரணை செய்யப்பட்டு இறுதியாக முடிவு செய்யப்படும் வரையில் எவரும் அந்த நிலத்திலே நுழையக்கூடாதென்று இருதரப்பினரையும் புதுக்கோட்டை, மாவட்ட உதவி ஆட்சித் தலைவர் எச்சரித்தார். ஊராட்சியிடம் உரிமை நிலை பெற்றுள்ள நிலமாகிய சர்வே எண். 63/1ல் உள்ள நிலம் (தீர்வை விதிக்கப்படாத தரிசு நிலம்), ஊராட்சிமன்றத்தினரைக் கலந்து பேசாமல் திருமயம், தாசில்தாரால் வாரிய நிலை ஆணை 15. A -ன் கீழ் தற்காலிக அடிப்படையில் நான்கு அரிஜனங்களுக்குக் கவனப் பிசகாக ஒப்படை செய்யப்பட்டமையால் உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் 17—9—69-ம் நாளிட்ட தனது நடைமுறைக் கோப்பு 4. 22054/69-ல் எல்லாத் தற்காலிக ஒப்படைகளையும் ரத்து செய்தார். மற்ற ஒப்படைகள் சரியாக உள்ளனவா என்றும் அவர் ஆராய்ந்து வருகிறுர்.

அக்கிராமத்தில் இப்போது அமைதி நிலவுகிறது. தற்போது தொல்லை ஏதும் இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம்: பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக இந்தக் கோட்டூர்ப்பகுதியில் 1965-ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட நிலங்களை 1967-ஆம் ஆண்டிலிருந்து சாகுபடி செய்து வந்திருக்கிறுர்கள். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரவர்களின் தலைமையில் நல்ல விசாரணை நடத்த ஆவன செய்ய அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.